2018 ஜூன் 8]

திருமதி நா. மனோரஞ்சிதம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 158, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

158—

தனி வட்டம்

***694—திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் மற்றும் தொப்பம்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து, கள்ளிமந்தையத்தைத் தனி வட்டமாக உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பழனி வருவாய் வட்டத்தில் உள்ள தொப்பம்பட்டி மற்றும் கோரிக்கடவு ஆகிய இரு உள்வட்டங்களையும், ஒட்டன்சத்திரம் வருவாய் வட்டத்தில் உள்ள கள்ளிமந்தையம் மற்றும் தேவத்தூர் ஆகிய இரு உள்வட்டங்களையும் ஆய்வு செய்து, அரசு விதிகளின்படியும், அரசால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களின்படியும் புதிய வருவாய் வட்டம் உருவாக்க உரிய முன்மொழிவுகள் பெறப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பரிசீலிக்கப்படும் என்று சந்தோஷமாகத்தானே சொல்லியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் வட்டதைப் பொறுத்தளவிலே, ஒட்டன்சத்திரம் நகராட்சியும், 52 ஊராட்சிகளும் உள்ளன. பழனி வட்டத்தைப் பொறுத்தளவிலே, 41 ஊராட்சிகள், பழனி நகராட்சி, 4 பேரூராட்சிகள், பாலசமுத்திரம், நெய்க்காரப்பட்டி, ஆயக்குடி, கீரனூர், அதேபோல, குறுவட்டங்களைப் பொறுத்தளவிலே ஒட்டன்சத்திரம் வட்டத்தில் 5, ஒட்டன்சத்திரம், சின்னகாம்பட்டி, புளியூர்நத்தம், தேவத்தூர், கள்ளிமந்தையம், அதேபோல பழனி வட்டத்தில் ஆயக்குடி, பழனி, நெய்க்காரப்பட்டி, பாப்பம்பட்டி, தொப்பம்பட்டி, கோரிக்கடவு என மொத்தம் 11 குறு வட்டங்கள் உள்ளன.

மக்கள்தொகையை எடுத்துக்கொண்டால், 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 30,064, ஒட்டன்சத்திரம் வட்டத்தில் 1,52,536, பழனி நகராட்சியில் 70,467, பழனி வட்டத்தில் 2,21,834. இந்த இரண்டு வட்டங்களையும் சேர்த்து மொத்த மக்கள் தொகை 4,74,901. வருவாய்த் துறையையும் அமைச்சருடைய அளவுகோலின்படி, ஒரு வட்டத்தைப் பிரிக்க வேண்டுமென்றால் ஒரு இலட்சம் மக்கள்தொகை இருந்தால் பிரிக்கலாம் என்கிறீர்கள். இங்கு 4,74,901 மக்கள் இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், பொதுமக்களோ, விவசாயிகளோ, மாணவர்களோ ஒரு சான்றிதழ் பெற வேண்டுமென்றால் திருப்பூர் மாவட்டத்தில் இருக்கின்ற மூலனூர், தாராபுரம் போன்ற பகுதிகளிலிருந்து 3, 4 பேருந்துகள் மாறி ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் விவசாயிகளுடைய நலன் கருதி, ஒட்டன்சத்திரம் வட்டத்தையும், பழனி வட்டத்தையும் பிரித்து கள்ளிமந்தையத்திலே புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைத்துக்கொடுத்தால், மக்கள் பெரிதும் பயனடைவார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பிரிப்பதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா

2018 ஜூன் 8]

அவர்கள் சில தகவல்களைச் சொன்னார்கள். திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்தளவிலே, திண்டுக்கல் மாவட்டம் 1985-லே மதுரை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டது. அதில் தற்போது 3 வருவாய்க் கோட்டங்களும், 9 வட்டங்களும் இருக்கின்றன. அதுவும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் 2013-லே ஒருங்கிணைந்த திண்டுக்கல் வருவாய் வட்டமானது, திண்டுக்கல் கிழக்கு மற்றும் திண்டுக்கல் மேற்கு என இரண்டு வருவாய் வட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, 2014 முதல் செயல்பட்டு வருகிறது. இந்த நேர்விலே, 9 வட்டங்களைக் கொண்ட திண்டுக்கல் மாவட்டத்திலே 10-வது வட்டத்தை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் கொடுத்திருக்கும் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

அதைப்போல, நமது அரசின் விதிகள், அளவுகோல்கள் எல்லாம் பூர்த்தியாவதாகச் சொன்னீர்கள். இன்னும் பூர்த்தியாகவில்லை. அதாவது, 1 இலட்சம் என்பது குறைந்தபட்சம், அதிகபட்சம் 5½ இலட்சம் வரவேண்டும். 30 வருவாய்க் கிராமங்கள் இருக்க வேண்டும். அவை இருந்தபோதிலும்கூட அரசு விதிகளையும், அளவுகோல்களையும் உருவாக்குகிறவகையிலே, கருத்துருக்களைப் பெற்று, முன்மொழிவுகளைப் பெற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, ஏனென்றால் நேற்றே மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின்மீது நம்பிக்கை வைத்து 72 வட்டங்கள் என்று இருந்ததை 73 வட்டங்களாக அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். மக்களின் நலன் கருதித்தான் நீங்கள் இதைக் கேட்கிறீர்கள். அதேபோல, மக்கள் சான்றிதழ்கள் பெறுவதற்காக நீண்ட தூரம் செல்ல வேண்டியிருக்கிறது என்ற கருத்தையும் இங்கே முன்வைத்திருக்கிறீர்கள். இந்தியாவிலேயே எங்கும் இல்லாத அளவிற்கு இருந்த இடத்திலிருந்தே online-ல் சான்றிதழ்களைப் பெறுகின்றவகையில், ஒரு நிருவாகப் புரட்சியை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் தலைமையிலான அரசு உருவாக்கியிருக்கிறது.

இருந்தபோதிலும், இன்றைக்கு தாலுகா அலுவலகங்கள், வட்ட அலுவலகங்கள் ஒவ்வொரு தொகுதியிலும் தேவைப்படுகின்றன. அதைக் கருத்தில் கொண்டு, நிதிநிலைமைக்கேற்ப, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, நிச்சயமாக 9 வட்டங்களைக் கொண்ட திண்டுக்கல் மாவட்டத்தில் 10-வது வட்டத்தை உருவாக்கிட வேண்டும் என்ற மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுதான் பரிசீலிக்கப்படும் என்று சொல்லிவிட்டாரே! அதோடு திரு. சக்கரபாணி அவர்கள் திருப்தியடைய வேண்டியதுதானே! (குறுக்கீடு) திரு. சக்கரபாணி, என்னவென்று சொல்லுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் குறு வட்டத்தைப் பொறுத்தவரையில், ஒட்டன்சத்திரம் நகராட்சி மற்றும் 16 ஊராட்சிகளைக் கொண்ட பெரிய குறு வட்டமாக இருக்கிறது. அதையும் சத்திரப்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய குறு வட்டமாகப் பிரிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், 1996 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கிராம நிருவாக அலுவலர்களுக்கெல்லாம் கட்டடம் கட்டித் தரப்பட்டது. ஆனால், இப்பொழுது தமிழகம் முழுவதும் வருவாய் ஆய்வாளர்களுக்குச் சொந்தக் கட்டடம் இல்லாமலும், பல்வேறு வருவாய் குறு வட்டங்களிலும் அவர்கள் பணிபுரிகின்ற இடங்களில் கட்டடங்கள் இல்லாமலும் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் கலந்து பேசி, தமிழகம் முழுவதும் எங்கெங்கு குறு வட்டத்தைத் தலைமையிடமாகக் கொண்டு கட்டட வசதியில்லாமல் வருவாய் ஆய்வாளர்கள் இருக்கின்றார்களோ, அங்கெல்லாம் கட்டடம் கட்டித் தருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

2018 ஜூன் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வட்டத்திலிருந்து புதிய கட்டடத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்றிருக்கிறார்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கட்டடம் கட்டித் தந்த தகவலைச் சொன்னார்கள். நிச்சயமாகக் கட்டித் தந்தீர்கள். அதை இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், அதைக் காட்டிலும், இந்த 7 ஆண்டுகளில் வருவாய்த் துறைக்கு மட்டும் ரூ.510 கோடியில் 419 கட்டடங்களை உருவாக்கித் தந்திருக்கிற ஒரே அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அது அவர்களுக்கும் தெரியும்.*

அதேபோல, கிராம நிருவாக அலுவலர்களுக்கு ஏற்கெனவே இருந்த பழைய கட்டடங்களைப் புதுப்பிப்பதற்காக முதன்முதலாக நிதி ஒதுக்கீடு செய்ததும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கின்ற கோரிக்கையின் அடிப்படையில், எங்கெல்லாம் தேவை இருக்கிறதோ, அங்கெல்லாம் புதிய கட்டடங்களைக் கட்ட நாங்கள் ஒவ்வொரு நிதியாண்டிலும் நிதியை ஒதுக்கிக் கொடுத்து, கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசிலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 159, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

159—

வீட்டுமனைப் பட்டா

***120—திரு. எஸ். பவுன்ராஜ்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—